இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 301 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 28 – புதன்கிழமை 11 ஜூன் 2025 – சென்னை 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 301: Thiruvalluvar Year - 2056 - Vaikasi 28 - Wednesday 11 June 2025 - Chennai 28 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.6.2025) சென்னை, தரமணியில் உலக வங்கியின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள நவீன உலகளாவிய வணிக மையத்தை (Chennai Global Business Center) திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், ஒன்றிய அரசின் கேபினட் செயலாளர் முனைவர் டி.வி. சோமநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உலக வங்கியின் மேலாண்மை இயக்குநர் வென்காய் ஜாங், உலக வங்கியின் இந்தியாவிற்கான இயக்குநர் அகஸ்டே டானோ கோமே, சென்னை மையத் தலைவர் சுனில் குமார், உலக வங்கியின் உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## உலக வங்கியுடன் இணைந்து

# தமிழ்நாட்டை “மாடல் ஸ்டேட்”டாக உருவாக்குவோம்!

## உலக வங்கியின் உலகளாவிய வணிக மையத் திறப்பு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஜூன் 11 -**

**“சமூகப் பொருளாதார சமநிலை மற்றும் நிலையான வளர்ச்சி என்ற இலக்கில் தமிழ்நாட்டை உலக வங்கியுடன் இணைந்து ஒரு “மாடல் ஸ்டேட்” டாக உருவாக்குவோம்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தரமணியில் உலக வங்கியின் உலகளாவிய வணிக மையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போது உறுதிபடக் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.06.2025) சென்னை, தரமணியில் உலக வங்கியின் உலகளாவிய வணிக மையம் திறப்பு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

உலக வங்கியின் உலகளாவிய வணிக மையம் திறப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கக்கூடிய கேபினட் செயலாளர் அன்பிற்கினிய டாக்டர் சோமநாதன் அவர்களே, உலக வங்கியின் மேலாண்மை இயக்குநர் வென்சாய் ஜாங் அவர்களே, இந்தியாவிற்கான இயக்குநர் அகஸ்டே அவர்களே, தமிழ்நாடு தலைமைச் செயலாளர் முருகானந்தம் அவர்களே, அரசு உயர் அதிகாரிகளே, உலக வங்கியின் சென்னை மையத் தலைவர் சுனில் குமார் அவர்களே, பல்வேறு நாடுகளிலிருந்து வருகை தந்திருக்கக்கூடிய உலக வங்கியின் அதிகாரிகளே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான காலை வணக்கம்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.6.2025) சென்னை, தரமணியில் உலக வங்கியின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள நவீன உலகளாவிய வணிக மையத்தை (Chennai Global Business Center) திறந்து வைத்து, சிறப்புரையாற்றினார்.

உலக வங்கியின் சென்னை குளோபல் பிசினஸ் மையத்தை திறந்து வைக்கின்ற இந்த நிகழ்வில் கலந்து கொள்வது மகிழ்ச்சியும், பெருமையும் எனக்கு தருகிறது.

உலக வங்கியுடன் நம்முடைய Partnership 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயக் கடன் திட்டத்தில் தொடங்கியது. அப்போது இருந்து, தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு, சுகாதாரம், கல்வி, பேரிடர் மேலாண்மை, நகர்ப்புற வளர்ச்சி போன்ற பலதரப்பட்ட துறைகளில் உலக வங்கி நமக்கு உறுதுணையாக இருந்து வருகிறது.

### சென்னையில்தான் உலக வங்கியின் முதல் மண்டல அலுவலகம்!

குறிப்பாக, 2022ஆம் ஆண்டில், புது டெல்லிக்கு வெளியே தன்னுடைய முதல் மண்டல அலுவலகத்தை உலக வங்கி சென்னையில்தான் அமைத்தார்கள். செயல்பாட்டில் இருக்கும் திட்டங்களுக்கு உதவி செய்து, வேகமான மற்றும் வலுவான ஒருங்கிணைப்புக்கும் வழி ஏற்படுத்தி, தமிழ்நாடு மற்றும் தென்னிந்தியாவுடனான உலக வங்கியின் உறவை இந்த அலுவலகம் மேலும் வலுப்படுத்தியிருக்கிறது.

உலக வங்கியுடனான நம்முடைய இந்த நீண்ட நெடிய உறவு பல்வேறு துறைகளில் பல நற்பலன்களை வழங்கியிருக்கிறது. முக்கியமான சிலவற்றை மட்டும் நான் பட்டியிலிட விரும்புகிறேன்.

**1980ஆம் ஆண்டு மற்றும் 1990ஆம் ஆண்டு முதல் இரண்டு கட்டங்களில் ‘தமிழ்நாடு ஊட்டச்சத்து திட்டம்’ மற்றும் 2004ஆம் ஆண்டிலும் 2010ஆம் ஆண்டிலும் செயல்பாட்டில் இருந்த தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம். இந்த இரண்டும் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலன்களில் முன்னேற்றம் காண சிறந்த முன்னெடுப்பாக அமைந்தது. இன்றைக்கு தமிழ்நாடு இந்தத் துறைகளில் இந்தியாவிற்கே லீடர் என்று சொல்லக்கூடிய இடத்தை அடைந்திருக்கிறது.**

**அடுத்து, வறுமையை ஒழித்து ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு செயல்படுத்தப்பட்ட ‘வாழ்ந்து காட்டுவோம்’ எனும் முன்மாதிரி திட்டம், 20 லட்சம் ஏழை குடும்பங்கள் இதனால் முன்னேறி இருக்கிறார்கள். பெண்களுக்கான அதிகாரத்தை வழங்கியது மட்டுமல்லாமல், உழவர்களுக்கு நிலைத்த சமுதாயக் கட்டமைப்புகளையும் இந்தத் திட்டம் உருவாக்கி தந்திருக்கிறது.**

### சுயஉதவிக் குழுவுக்கு உதவிய வாழ்ந்து காட்டுவோம் திட்டம்!

**அதுமட்டுமல்லாமல், சுய உதவிக் குழுக்களை ஊக்கப்படுத்தி பெண்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தியிருக்கிறது. இந்தத் திட்டத்தின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாக ஒரு தரவை நான் சொல்ல விரும்புகிறேன்.**

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

## இன்றும் நாளையும் ஈரோடு, சேலம் மாவட்டங்களில்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் களஆய்வு!

## பொதுமக்கள், தொண்டர்களைச் சந்திக்கிறார்!

**ஈரோடு, ஜூன் 11 -**

**மேட்டூர் அணையை திறக்க இன்று (11ம்தேதி) சேலம் வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 11 கிலோ மீட்டர் தூரம் ரோடுஷோ முறையில் பொதுமக்கள், தொண்டர்களைச் சந்திக்கிறார்.**

காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து வரும் 12ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தண்ணீர் திறந்து வைக்கிறார். தொடர்ந்து, சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி வளாகத்தில் நடக்கும் அரசு விழாவில் கலந்து கொண்டு, சுமார் ஒரு லட்சம் பேருக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இந்த விழாவிற்கான முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருகிறது. இதனிடையே சேலம் மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் மாளிகையில், சேலம் மத்திய மாவட்ட திமுக செயலாளரும், சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது :-

காவிரி டெல்டா பாசன விவசாயிகளுக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் 11ம் தேதி (இன்று) சேலம் வருகிறார். முன்னதாக, ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் இருந்து வரும் அவருக்கு, சேலம் மாவட்ட எல்லையான பவானி – மேட்டூர் ரோடு நவப்பட்டி பெரும்பள்ளம் என்ற இடத்தில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. பின்னர் தனியார் மண்டபத்தில் கட்சி நிர்வாகிகளை சந்தித்து கலந்துரையாடுகிறார்.

### 11 கி.மீ. ரோடு ஷோ!

தொடர்ந்து அங்கிருந்து, மேட்டூர் வரை சுமார் 11 கிலோ மீட்டருக்கு ரோடு ஷோ முறையில் பொதுமக்கள் மற்றும் தொண்டர்களைச் சந்திக்கிறார். அவர்களின் வரவேற்பை ஏற்றுக்கொள்ளும் முதல்வர், அன்றிரவு மேட்டூர் பொதுப் பணித்துறை ஆய்வு மாளிகையில் தங்குகிறார். மறுநாள் 12ம் தேதி காலை 9.30 மணிக்கு மேட்டூர் அணையில் இருந்து டெல்டா விவசாயிகளுக்காக தண்ணீர் திறந்து வைக்கிறார். பின்னர் மேச்சேரி, ஓமலூர் வழியாக சேலம் வந்து அரசு மருத்துவக்கல்லூரி வளாகத்தில் நடைபெறும் விழாவில் கலந்து கொள்கிறார்.

இவ்விழாவில் ஆயிரக்கணக்கானோருக்கு வீட்டுமனை பட்டா உள்பட 1.01லட்சம் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். மேலும் பல்வேறு துறைகளின் சார்பில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களை திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவதுடன், சேலம் மாவட்டத்திற்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறார்.

---

## இந்தியாவிலேயே முதல் முறையாக

# சென்னையில் வணிக வளாகங்களின் வழியாக மெட்ரோ வழித்தடம்!

### 9 அடுக்கு மாடி கட்டிடத்திற்குள் சென்று வரும் வகையில் அமைகிறது!

*சென்னை, ஜூன் 11 -*

*நாட்டிலேயே முதல் முறையாக வணிக வளாகங்களின் வழியாக மெட்ரோ வழித்தடம் அமைக்கும் பணி சென்னையில் நடைபெறவுள்ளது. 9 அடுக்கு மாடிகளை கொண்ட கட்டிடத்திற்குள் மெட்ரோ ரயில்கள் சென்று வரும் வகையிலான வடிவமைப்பை மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்டுள்ளது.*



*சென்னையில் பெருநகர் மற்றும் புறநகரை இணைக்கும் வகையில் 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்ட பணிகள் 3 வழித்தடங்களில் நடைபெற்று வருகின்றன. முதற்கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் உள்ள ரயில் நிலையங்களில் வணிக வளாகங்கள் அமைக்க கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒப்பந்தங்கள் அறிவிக்கப்பட்டன.*

*இதில் திருமங்கலத்தில் மெட்ரோ ரயில் நிலையத்துடன் கூடிய 9 மாடி கட்டிடத்தின் மாதிரி படங்கள் வெளியாகியுள்ளன. வணிக வளாகத்துடன். 9 மாடிகளைக் கொண்ட 3 கட்டிடங்களாக கட்டப்படுகிறது.*

*இத்திட்டத்தின் மையமாக ஒருங்கிணைக்கப்பட்ட 2 மாடிகளை கொண்ட ரயில் நிலையம் அமைகிறது.*

*வணிக கட்டிடங்களின் 4வது தளத்தில் மெட்ரோ ரயில் நிலையம், 5 மற்றும் 6வது தளத்தில் மெட்ரோ ரயில்கள் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.*